புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்
தாவரவியல் பூங்கா, புதுவை

----

எண்:81/கூ.வே.இ.(தோ.க.)இ பூங்கா.2021-22 தேதி:17.05.2021

## ஏல அறிவிப்பு
## (மின்னனு இணையதள ஏலமுறை)

புதுச்சேரி, மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டம் மற்றும் புதுச்சேரி தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மரங்களின் காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஏலம் இணையதளம் மூலம் (https://eauction.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகளை கோருவதற்கான நாள் 04.06.2021 காலை 10.00 முதல் மாலை 4.00 மணி வரை (சேவையகத்தின் தானாக நீட்டிப்பு வசதியுடன்) ஏலம் விடப்படயிருக்கிறது. ஏலம் விடப்பபடயிருக்கும் மரங்களின் விபரம் கீழ்வருமாறு:-

| வ.எண் | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | அரசு பழத்தோட்டம, மதகடிப்பட்டு | தாவரவியல். பூங்கா, புதுச்சேரி |
| 1 | இலவம் பஞ்சு மரம் | - | 35 |
| 2 | சப்போட்டா மரம் | 104 | - |
| 3 | தென்னை மரம் | 52 | 90 |
| 4 | கொய்யா மரம் | 34 | - |
| 5 | மா மரம் | 340 | 80 |
| 6 | புளிய மரம் | 74 | 51 |
| 7 | செர்ரி | 36 | - |
| 8 | பலா மரம் | 11 | - |
| 9 | முந்திரி மரம் | 8 | - |
| 10 | நெல்லி மரம் | 42 | - |
| 11 | சீத்தா மரம் | 42 | - |

விண்ணப்பம், மின் ஏல அறிவிப்பு, விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விபரம் அடங்கிய படிவங்களை 19.05.2021 தேதி முதல் (https://eauction.gov.in) மற்றும் (https://agri.py.gov.in) என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுவை.

## ஏலம் விடப்படும் மரங்களின் விபரம்

### அரசு பழத்தோட்டம், மதகடிப்பட்டு

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் |
|---|---|---|---|
| 1 | மா மரம் | 340 | 31.08.2021 வரை |
| 2 | சப்போட்டா மரம் | 104 | 24.12.2021 வரை |
| 3 | புளிய மரம் | 74 | 24.12.2021 வரை |
| 4 | தென்னை மரம் | 52 | 24.12.2021 வரை |
| 5 | நெல்லி மரம் | 42 | 24.12.2021 வரை |
| 6 | சீத்தா மரம் | 42 | 30.11.2021 வரை |
| 7 | செர்ரி | 36 | 24.12.2021 வரை |
| 8 | கொய்யா மரம் | 34 | 24.12.2021 வரை |
| 9 | பலா மரம் | 11 | 31.10.2021 வரை |
| 10 | முந்திரி மரம் | 8 | 30.11.2021 வரை |

### தாவரவியல் பூங்கா, புதுச்சேரி

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் |
|---|---|---|---|
| 1. | இலவம் பஞ்சு மரம் | 35 | 30.06.2021 வரை |
| 2. | தென்னை மரம் | 90 | 31.10.2021 வரை |
| 3. | மா மரம் | 80 | 31.08.2021 வரை |
| 4. | புளிய மரம் | 51 | 31.08.2021 வரை |

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை),
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி.

புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி

<u>விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:</u>

1. இந்திய குடியரசு தலைவர் சார்பாக மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டம் மற்றும் தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான மரங்களின் காய் கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான மின்னனு ஏலம் நிகர்நிலை இணையதளம் https://eauction.gov.in மூலமாக 04.06.2021 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சேவையகத்தின் தானாக நீட்டிப்பு வசதியுடன் ஏலம் நடத்தப்படுகிறது.

2. விண்ணப்ப படிவம், மரங்களின் விபரம், விண்ணப்ப கட்டண விபரம் மற்றும் ஏல நிபந்தனைகள் வரும் 19.05.2021 அன்று 10.00 மணிமுதல் https://eauction.gov.in மற்றும் https://agri.py.gov.in என்ற இணையதள முகவரியில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

3. ஏலம் கேட்க விருப்பம் உடையவர்கள் விண்ணப்ப கட்டணமாக ரூ.105.00 (GST உள்ளடங்கியது) தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் மூலமாக கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி அல்லது The Additional Director of Agriculture (Horticulture), Puducherry என்று குறிப்பிட்டு புதுச்சேரியில் செலுத்ததக்க கேட்பு வரைவு ஓலை (Demand Draft) சமர்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவத் தொகை திரும்ப பெறத்தக்கதல்ல.

4. ஏலம் கேட்க விருப்பம் உடையவர்கள், மேற்கண்ட துறையால் வரையறுக்கப்பட்ட கட்டாய முன் வைப்புத் தொகையாக (EMD) மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டத்திற்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) மற்றும் தாவரவியல் பூங்காவிற்கு ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) தனித்தனியாக கேட்பு வரையோலையை புதுச்சேரியில் செலுத்தத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் மூலமாக கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி அல்லது The Additional Director of Agriculture (Horticulture), Puducherry என்று குறிப்பிட்டு எடுத்து ஏல விண்ணப்பத்துடன் இணைத்து சமர்பிக்கவேண்டும்.

5. ஏலம் கேட்க விருப்பம் உள்ளவர்கள், வரும் 02.06.2021 மாலை 5.00 மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்பாகவோ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் விண்ணப்ப கட்டணம் (DD), கட்டாய முன் வைப்புத்தொகை (DD) மற்றும் முகவரி அத்தாட்சி (ஆதார் அல்லது வாக்காளர் அடையாள அட்டை அல்லது ஓட்டுநர் உரிமம்) இவை அனைத்தையும் https://eauction.gov.in என்ற இணையதளத்தின் வழியாக பதிவேற்றம் செய்தபின் அதன் அசலை கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) தாவரவியல் பூங்கா, புதுச்சேரி அலுவலகத்தில் செலுத்தியபின் ஏலம் கேட்பவருக்கு மின்னனு ஏலத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

6. வரையறுக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் எந்த ஏலதாரர், **ஆவணங்களை நேரிலும் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்கிறாரோ அவருக்கு மட்டும் மின்னனு ஏலத்தில் பங்கு பெற அனுமதி அளிக்கப்படும்**. பங்கு பெறும் ஏலதாரர் தெளிவான முகவரி மற்றும் தகவல் தொடர்பு எண்ணை கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்பிக்க வேண்டும்.

7. சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரிபார்பிற்கு பின்னரே ஏலதாரர் அலுவலகம் அனுமதித்த பின் மின்னனு ஏலத்தில் பங்கு கொள்ள இயலும்.

8. ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அவசியம் ஒரு **டிஜிட்டல் கையொப்பம்** பெற்றிருக்க வேண்டும். டிஜிட்டல் கையொப்பம் பெற்று ஏலத்தில் கலந்துக் கொள்ள விருப்பம் உள்ளவர்களுக்கு அதற்கு உண்டான கணினி வழியே பங்கு கொள்வதற்கான சிறப்பு பயிற்சியை தலைமை செயலகத்தில் உள்ள மின்கொள்முதல் பிரிவு (e-procurement cell) மூலம் பயிற்சி எடுத்துக் கொள்ளலாம். மேலும், அந்த அலுவலகத்தை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண் "0413-2220225/1800 233 7345 (கட்டணம் இல்லா சேவை)".

9. கணினி வழியாக மட்டுமே (online) ஏலம் நடத்தப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலத் தொகையை மேற்கூறிய இணையதளத்தின் (online) வழியாக

அ. அரசு பழத்தோட்டம், மதகடிப்பட்டில் உள்ள ஏலப்படிவத்தின் குறிப்பிட்டுள்ள அனைத்து மரங்களின் காய்,கனி மகசூலுக்கு தனியாகவும்.

ஆ. தாவரவியல் பூங்கா புதுச்சேரியில் உள்ள ஏலப்படிவத்தின் குறிப்பிட்டுள்ள அனைத்து மரங்களின் காய்,கனி மகசூலுக்கு தனியாகவும் தங்கள் ஏலத்தொகையை குறிப்பிட வேண்டும்.

10-. ஏலம் கேட்பவர்கள், எந்த இடத்தில் இருந்தும் மேற்கண்ட ஏலத் தேதிகளில் குறிப்பிட்ட நேரத்தில் மேற்கூறிய இணையதளத்தின் வழியாக அவர்களுடைய டிஜிட்டல் கையெப்பத்தின் உதவியுடன் கூடிய பயன்படுத்துவோருடைய பெயர் (User ID) மற்றும் கடவுசொல் (Password) வழியே ஏலத் தொகையை குறிப்பிடலாம். ஏலத் தொகையை குறிப்பிடும் நபரின் அடையாளம் ரகசியமாக வைக்கப்படும். ஏலத் தொகை மட்டுமே காட்டப்படும்.

11. அதிகபட்ச கேட்புத் தொகையை ஒப்பந்த செயற்குழு தலைவா் மற்றும் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள். மின்னனு ஏலமுடிவில் வெற்றி பெற்ற ஏலதாரர்களுக்கு **தகவல்** தெரிவிக்கப்படும்.

12. வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு கட்டாய வைப்பு தொகைக்கான அவர்களுடைய வரைவு காசோலை மறுநாள் திருப்பி தரப்படும்.

13. வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தொகை முழுவதையும் மூன்று நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்த தவறும் பட்சத்தில் அவருடைய கட்டாய முன்வைப்பு தொகைக்கான (EMD) வரைவு ஓலையை இழக்க நேரிடும். மேலும், அவருக்கு அடுத்தபடியாக உள்ள ஏலதாரர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். தகவல் கொடுக்கப்பட்ட ஏல தாரர் 3 நாட்களுக்குள் அந்த முதல் ஏலதாரர் வெற்றிப்பெற்ற ஏலத் தொகை, முழுவதையும் செலுத்த வேண்டும்.

14. ஏலம் கேட்க விருப்பம் உடையவர்கள் பின் குறிப்பிட்டுள்ள மரங்களை அரசு அலுவலக நேரத்தில் வேளாண் அலுவலர் அனுமதியுடன் பார்வையிடலாம்.

15. ஏலம் சம்மந்தமாக ஏதாவது தேவைப்படும் திருத்தம் சம்பந்தப்பட்ட துறையால் செய்யப்பட்டால் ஏலதாரர் தங்கள் ஆவணங்களை சமர்பிக்கும்முன் சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

16. ஏல விற்பனை முடிந்தவுடன் குத்தகை விடப்பட்ட மரங்களின் பாதுகாப்பு, தரம், மற்றும் அதன் மதிப்பு ஆகிய அனைத்திற்கும் ஏலத்தில் வெற்றிப்பெற்ற குத்தகைதாரரே பொறுப்பாவார்கள். குத்தகைதாரர் மரங்களுக்கு தாங்களே காவல் போட்டுக்கொள்ள வேண்டும்.

17. எக்காரணத்தைக் கொண்டும் பசுமையான தென்னை மட்டைகளையோ இதர மரங்களின் கிளைகளையோ வெட்டக்கூடாது.

18. வேளாண் அலுவலர் ஒப்புதலோடு அதிகபட்சமாக 5 காவலர்களை வைத்துக் கொள்ளலாம். ஆவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை ஒன்றை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

19. ஏலம் எடுத்தப்பின் அவர்களின் சார்பாக வேலை செய்யும் ஆட்களுக்கு அறுவடை செய்யும் போதோ, அறுவடை செய்த பொருட்களை வண்டியில் ஏற்றும் போதோ மற்றும் இதர வேலைகளின் போதோ உடல் நலத்திற்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டால் ஏலம் எடுத்தவரே பொறுப்பாவர்.

20. மேலே குறிப்பிட்டுள்ள மரங்களை அரசினால் வெட்ட நேரிட்டால் அதுசமயம் குத்தகைதாரர் மறுப்பு ஏதும் கூறாமல் மரங்களை வெட்ட அனுமதிக்க வேண்டும். அவ்வாறு வெட்டப்படும் மரங்களுக்கு ஈட்டுத்தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது.

21. குத்தகையை குறிப்பிட்ட காலத்திற்குள்ள தானாக ரத்து செய்ய நேர்ந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு அரசு பொறுப்பேற்காது.

22. ஏலம் எடுத்தவர்கள் ஒவ்வொரு அறுவடைக்குப்பின்பும் பண்ணையை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

23. குத்தகை காலம் முடிந்தவுடன் அனைத்து மரங்களையும் நல்ல நிலையிலேயே திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

24. ஏலம் எடுத்தவர் மகசூலை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வேளாண் அலுவலரின் அனுமதி பெற்று எடுத்து செல்ல வேண்டும்.

25. இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் நட்டத்திற்கு அரசு பொறுப்பேற்காது.

26. அரசு சட்டவிதிகளுக்கு முரணான நடவடிக்கைகள் ஏதேனும் அரசு பழத்தோட்டம், மதகடிப்பட்டு மற்றும் தாவரவியல் பூங்கா, புதுச்சேரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படுவதாக தகவல் வருமேயானால் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு அவர் செலுத்திய அனைத்து தொகையும் இழக்க நேரிடும். முற்றும் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27. ஏலத்தின் பங்கேற்பவரின்மீது ஏலம் நடைபெறுவதற்குமுன் அல்லது பின் அவர்களின் மீது சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவராக தெரிய வந்தால் எந்த ஒரு முன் அறிவிப்பின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும் அவர் செலுத்திய அனைத்து தொகையும் இழக்க நேரிடும்.

28. மேற்கண்டவற்றில் சர்ச்சை ஏதேனும் ஏற்பட்டால் கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), தாவரவியல் பூங்கா, புதுச்சேரி அவர்களின் முடிவே இறுதியானது.

29. எவ்வித காரணமின்றி ஏலத்தை ஏற்கவோ அல்லது மறுக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), தாவரவியல் பூங்கா, புதுச்சேரி அவர்களுக்கு உரிமை உள்ளது.

30. மேற்கண்ட ஏலம் சம்மந்தமான எந்த ஒரு பிரச்சனைக்கு உண்டான வழக்கும் புதுவை மாநில நீதிமன்றத்திற்கு மட்டுமே உட்பட்டதாகும்.

**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை),**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி.**